பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/1999) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஔ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1999

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/1999), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/1999)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

@ 17-05-1999ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு ஊரக (குறுக்கீடு) முதலிலே பேசவில்லை என்று சொன்னீர்கள். (குறுக்கீடு) திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவில் ஏற்கெனவே கிராம சபாவிற்கும் அங்கேயிருக்கக்கூடிய உள்ளாட்சி மன்றத்திற்கும் விளம்பரப் போர்டுகளை எல்லாம் அவர்கள் வைப்பதற்கு, அவர்கள் வரி விதிப்பதற்கு, லைசென்ஸ் கொடுப்பதற்கான வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதிலே ஒரேயொரு இடத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்தலுக்கு நிற்கிறபோது, அவர்களுக்கு மட்டும் நீங்கள் விதிவிலக்கு அளித்திருக்கிறீர்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பற்றி அதிலே சொல்லப்படவில்லை. தற்போது நாடாளுமன்றத் தேர்தல்தான் உடனடியாக வரப்போகிறது. நாடாளுமன்றத் தேர்தலுக்கு உரிய உறுப்பினர்கள் போர்டு வைத்தால், அவர்களுக்கு வரிவிதிக்கிற நிலைமை வந்துவிடும். அவர்களிடம் அனுமதி பெற வேண்டும் என்கிற நிலைமை வந்துவிடும். ஆகவே, இதை மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, பொதுவாக நாடாளுமன்றத் தேர்தலையும், சட்டமன்றத் தேர்தலோடு இணைத்து, அதற்கான விளம்பர போர்டுகள் —உள்ளாட்சிகளுக்கு இப்போது இடைத் தேர்தல்கள்கூட வரவிருக்கிறது. அதற்குக்கூட போர்டு வைப்பார்கள் — அதற்கும் வரிவிதிக்கப்படக் கூடாது; லைசென்ஸ் கேட்கக் கூடாது. ஆகவே தேர்தல் என்றாலே, அவை எல்லாவற்றிற்கும் விதிவிலக்குக் கொடுத்துவிடலாம் என்ற ஒரு நிலையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்ட அந்தக் குறையை ஏற்று, இந்த விதியிலே இடம் பெறச் செய்யலாம் என்பதைத் தெரிவித்து, இதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கோருகிறேன்.

1999 மே 18]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

முற்பகல் 11-45

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/1999) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

10. அரசினர் தனித் தீர்மானங்கள்

(அ) மாநிலங்களின் பொதுக் கடன் மற்றும் அதனோடு தொடர்புடைய இடைநிகழ்வுகள் அனைத்தையும் முறைப்படுத்த இந்தியா முழுமைக்கும் ஒரே மாதிரியானச் சட்டம் கொண்டுவர நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் அளித்தல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, அரசினர் தனித் தீர்மானங்கள். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஆலடி அருணா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"மாநிலங்களின் பொதுக் கடன், மற்றும் அதனோடு தொடர்புடைய, அல்லது அதன் துணையான அல்லது அதன் இடைநிகழ்வுகள் அனைத்தையும் முறைப்படுத்த இந்தியா முழுமைக்கும் ஒரே மாதிரியானதொரு சட்டம் இருப்பது நலம் என்று தமிழ்நாடு சட்டப் பேரவை கருதுவதாலும்;

அத்தகைய சட்டத்தின் நுதல்பொருள், முக்கியமாக, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 7-வது அட்டவணையில் பட்டியல்-II-ஐச் சேர்ந்த 43-வது பதிவில் குறிப்பிடப்பட்டுள்ள பொருளுக்குத் தொடர்புடையதாக இருப்பதாலும்;

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 249 மற்றும் 250 ஆம் பிரிவுகளில் வகை செய்யப்பட்டுள்ளதைத் தவிர மற்றபடி, மேற்சொன்ன பட்டியல் II-ன் 43-வது பதிவில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள்